விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 8 றஜப் 4 இதழ்: 270
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-1-1991

யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கத்தால்

## பொருட்களின் விலை நிர்ணயம் மண்ணெண்ணெ 30 ரூபா

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் யாழ் மாவட்ட வர்த்தக சங்கத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் வர்த்தக சங்கத்தினர் அண்மையில் நடத்திய கலந்துரையாடலின் பின்னரே பொருட்களின் விலைகள் இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது:

வர்த்தகர் சங்கம் நிர்ணயித்த பொருட்களின் விலை விபரம் வருமாறு:

கோதுமை மாவு ஒரு கிலோ

[4ம் பக்கம் பார்க்க]

## 150 லொறிகள் உணவுடன் யாழ். நோக்கி வருகின்றன

(பூநகரி)

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் வந்த 150 லொறிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு வவுனியா இரா

(4-ம் பக்கம் பார்க்க)

★ வல்வெட்டித்துறையில்

# 7 விமானம், 2 ஹெலி தாக்குதல்: எண்மர் பலி, 10 பேர் காயம்!

## வீடுகள், கட்டடங்கள் சேதம்

(வடமராட்சி நிருபர் லி. சுந்தரலிங்கம்)

**வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று மாலை ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் இரு தடவைகள் நடத்திய பயங்கரக்குண்டு வீச்சுத் தாக்குதலினால் எட்டுப் பொதுமக்கள் பலியானார்கள். பத்துப்பேர் படுகாயமடைந்தனர், ஏராளமான வீடுகள், கட்டிடங்கள் பெரும் சேதமடைந்தன.**

வல்வெட்டித்துறை ஊரிக்காடு, மயிலியதனை கரையோரங்களிலுள்ள பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்களை நோக்கி 4 பொம்மர் விமானங்கள், 3 அவ்ரோ விமானங்கள், 2 ஹெலிகொப்டர்கள் இணைந்து இத்தாக்குதலை நடத்தின.

நேற்று மாலை 3-45 மணியளவிலும் பின்னர் பி. ப. 5-30 மணியளவிலும் இரு தடவைகள் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது.

4 பொம்மர் விமானங்கள் நான்கு குண்டுகளையும் 3 அவ்ரோ விமானங்கள் 13 குண்டுகளையும், 2 ஹெலி கொப்டர்கள், 15 மோட்டர் குண்டுகளையும் வீசி பயங்கரத்

(4-ம் பக்கம் பார்க்க)

வவுனியாவில்

## வர்த்தக நிலையங்கள் வைத்தியசாலை சேதம்

[வவுனியா]

வவுனியாப் பகுதியிலுள்ள இரணை இலுப்பக்குளம், விளாத்திக்குளம் பகுதிகளில் நேற்றுக் காலை 9 மணிக்கு இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான இரண்டுபொம்மர்கள், இரண்டு அவ்ரோக்கள், இரண்டு ஹெலிகள், கூட்டாகச் சேர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டதில் வைத்தியசாலைகள், வர்த்தகநிலையங்கள் பொதுக்கட்டிடங்கள் போன்றன பெருமளவில் பலத்த சேதமடைந்தன.

இரணை இலுப்பக்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் அரசினர் வைத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமனாறு, வசாவிளான் பகுதிகளில் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு, வசாவிளான், கட்டுவன், பலாலிப் பகுதிகளிலும் ஹெலிகொப்டர்கள், அவ்ரோ மற்றும் பொம்மர் தாக்குதல் இடம் பெற்றது.

தொண்டமனாறுப் பகுதியில் நேற்று மாலை 5-45 மணி முதல் 6-00 மணி வரை பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

வசாவிளான், கட்டுவன் பகுதியில் நேற்று நண்பகல் 1-30 மணிக்கும் பின்னர் 2-30மணிக்கும் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் ஏராளமான கட்டடங்கள் சேதம் அடைந்தன.

[4-ம் பக்கம் பார்க்க]

## சாவகச்சேரியில் ஹெலி தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரிப் பகுதியிலும் நேற்று மாலை ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

39 லட்சம்

## மாணவருக்கு இலவச புத்தகம்

[கொழும்பு]

இவ் வருடம் 39 லட்சம் மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஒருகோடி எண்பத்தெட்டு லட்சம் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

குருமண் காட்டில்

## ஆயுதங்கள் மீட்பு ஒரு சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதுடன் விடுதலைப் புலிகளினால் பல ஆயுதங்

(4-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் சுக்ளா

## இனப் பிரச்னை குறித்து பேச்சு நடத்துவார்

[புதுடில்லி]

இம்மாதம் 28ம் திகதி இலங்கைவரும் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. பி. சுக்ளா இனப்பிரச்னைகுறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும், விடுதலைப்புலிகள் அறிவித்த போர் நிறுத்த அறிவிப்பின் பின்பு அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றியும் திரு. சுக்ளா பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிய வருகிறது. (க)

## மட்டுநகரில் 1576 பேர் காணமல்போயுள்ளனர்!

(மட்டக்களப்பு)

கடந்த வருடம் ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் 1576 பேர் காணமல்போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணமல்போனவர்களின் பெற்றோரும் உறவினரும் தங்களது பிள்ளைகளைத்தேடி நாளாந்தம் ஒவ்வொரு சிறிலங்கா இராணுவமுகாமுக்கும் அலைந்து திரிகின்றனர் என்று கூறப்படுகிறது. (153)

உலர் உணவு அட்டைகள்

## மீள் பரிசோதனைக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள உலர் உணவு அட்டைகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆஸ்பத்திரி

## எரிபொருள் கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலைக்கு தேவையான ஜனவரி மாதத்துக்குரிய எரிபொருட்கள் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. [153]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய அவரி 5 அந்தர் (250 kg) மேடைத்தராசு விற்பனைக்கு உண்டு. விபரமிகட்டு தொடர்பு கொள்க. மல்லிகா கூல்பார் சந்தையடி மானிப்பாய். (சி-4277)

### கொம்பியூட்டர் கல்வி

கொம்பியூட்டர் புறோகிறுமிங் இன் Basic Language. ஆரம்பம்: 27-01-91 - 10-30 மணி. I.A B, Short - Hand & Typing நடைபெறுகின்றன. School of Business Administration 16, 3ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சி-4279)

### தரன் ஸ்ருடியோ

கறுப்பு வெள்ளை படங்கள் என்லாட்ஜ்மென் படங்கள், றபர் சீல், பிளாஸ்ரிக் போட், விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகள் 24, யாழ்: வீதி, (ரெயில் வீதி), யாழ்ப்பாணம். (சி 4274)

### "நிலவே நீ மயங்காதே"

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண்மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (சி-4272)

## அமைச்சு செயலகம்

[திருமலை]

கடற்றொழில், நீரியல் துறை அமைச்சுச் செயலகம் கடந்த 15-ம் திகதி திருகோணமலை உள்துறைமுக வீதியிலுள்ள புதிய கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (மா)

## மீன்களுக்கு நோய்

(மட்டக்களப்பு)

மட்டுநகர் வாவியிலுள்ள மீன்களுக்கு நோய் பீடித்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இதனால் மட்டக்களப்புப் பகுதி மக்கள் கடல் உணவுகள் உண்பதை நிறுத்தியுள்ளனர். [150]

## தேங்காய்க்கு தடை

[வேலணை]

அனலைதீவிலிருந்து வெளியிடங்களுக்கு தேங்காய் எடுத்துச் செல்வதற்கு ஸ்ரீலங்கா கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

நயினாதீவிலிருந்து வெளியிடங்களுக்கு அரிசி, மா, சீனி போன்ற உபஉணவு வெளியிடங்களுக்கு கொண்டுசெல்வது கடற்படையினரால் தடைவிதிக்கப்பட்டது தெரிந்ததே.

# UNIVERSITY GRANT'S COMMISSION

GELT & POP PROGRAMMES 1991 FOR UNIVERSITY ENTRANTS

## Posts of Part Time English Teacher

The University Grants Comission will conduct the General English Language Teaching and practical Orientation Programmes for those who qualify to enter the Universities based on the Advanced Level exam held in 1989. It will consist of English teaching and work experience in their chosen fields and elsewhere, designed to make them more confident as they enter the University.

The English teaching in this programme will include the components of (a) the English Everyday Series, (b) An Integrated Course in English for the Advanced Level, (c) Literature / English for specific purposes.

The following categories of teachers with at least ten years experience are eligible to apply for the above posts.

(1) English Medium graduates,
(2) English trained teachers.
(3) Graduates with English as a subject for the degree,
(4) Teachers with TESL and TEFL qualifications of any University or a Higher Institute of Education,
(5) Retired English Teachers with any of the above qualifications and below 65 years of age may apply.

Teachers will be expected to take classes on weekday afternoons at regionally distributed centres The course will be for a period of about six months and may involve about 50 hours of work per months.

All teachers selected will receive their letters of appointment from the University Grants Commission, and will be paid at UGC approved rates.

Applications prepared on 12'' X 8'' blank paper, using the specimen given below, should be sent by Registered Post to the undersigned on or before 08th February 1991. The letters 'GELT' and the district preferred should be noted on the top left hand corner of the envelope.

SECRETARY,
University Grants Commission,
20, Ward Place,
Colombo - 07.

## APPLICATION FORM

### POST OF PART TIME ENGLISH TEACHER

(1) Name: ... ... ... ... ... ...
(2) Designation: ... ... ... ... ... ...
(3) Age: .................. (4) Sex: .........
(5) Address: Home: ... ... ... ... ... ...
Official: ... ... ... ... ... ...
(6) District of residence: ... ... ... ... ...
(7) Professional qualifications: ... ... ... ... ...
(Attach photocopy of certificates)
(8) Academic qualifications and subjects qualified in: ... ... ... ... ...
(Attach photocopy of certificate of highest qualification)
(9) Relevant experience and training (briefly): ... ... ... ... ...
(10) Any other special qualifications: ... ... ... ...

I affirm the truth of the above particulars.

Signature: ... ... ... ... ...
Date: ... ... ... ... ... (A-1051)

## புலிகள் தாக்கியதால் இராணுவம் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

ஊரிகாவற்றுறை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய ராணுவத்தினர் முருகமூர்த்தி கோவில் பக்கமாக முன்னேறியபோது விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும், மோதல் ஏற்பட்டது.

சுமார் 2மணி நேரம் நடந்த இம் மோதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பியபோது கோவில் பகுதியில் வீடு ஒன்றை குண்டு வைத்து தகர்த்து விட்டு சென்றனர். (வி)

## வடக்கு-கிழக்கில் ஒருலட்சம் வாக்காளர் பதியப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1986ம் ஆண்டுக்கு பிறகு வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாக்காளர் இடாப்பு திருத்தியமைத்தல் வேலைகள் இதுவரை நடைபெறவில்லை. கடந்த நான்கு வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் 18 வயதுக்கும் மேற்பட்ட ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதியவில்லை,

தேசிய அடையாள அட்டைகள், பாஸ்போட், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றுக்கு இன்று வாக்காளர் இடாப்பு சான்றிழ் கேட்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (153)

## தையல் பயிற்சி வகுப்பு மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொழில் திணைக்களத்தால் காங்கேசன் துறையில் நடத்தப்பட்ட தையற்பயிற்சி நிலைய வகுப்புக்கள் இம்மாதம் 23ம் திகதி புதன்கிழமை முதல் தற்காலிகமாக மானிப்பாய் சங்குவேலி தையற்பயிற்சி நிலையத்தில் தொடர்ந்து நடாத்தப்படவிருப்பதாக உதவித் தொழில் ஆணையாளர் திரு. கே. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

எனவே காங்கேசன்துறை தையற்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த சகல பயிலுநர்களும் அன்றையதினம் காலை 8-30 மணிக்கு இந்நிலையத்திற்குப் பொறுப்பான தொழில் உத்தியோகத்தர் திரு கி. முத்துக்குமாரசுவாமியை உடுவில் மானிப்பாய் வீதியில் உள்ள ரொபி கம்பனிக்கு அருகாமையிலுள்ள ஒழுங்கையில் அமைந்துள்ள மானிப்பாய் சங்குவேலி தையற்பயிற்சி நிலையத்தில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## உள்ளூர் உற்பத்தி பொருள்கள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துடன் புதிதாக இணைத்துக்கட்டிய காட்சி அறையும், மேல்மண்டபமும் திறந்துவைக்கப்பட்டன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஆர். தெய்வேந்திரன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் கலந்துகொண்ட சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் குழுவின் சிறப்புப்பிரதிநிகள் திரு. பெறிட் கிறிமல், செல்வி ஜிற்றி, செல்வி விவியன் ஆகியோர் மங்கள விளக்கேற்றியும், நாடா வெட்டியும்திறந்து வைத்தனர்.

உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும் வகையில் இதற்கென கட்டப்பட்ட காட்சியறையில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மருந்து வகைகளும், பனை உற்பத்திப் பொருட்களும், வாழைநார் உற்பத்திப்பொருட்களும் இடம்பெறும். [123]

### சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஈச்சமோட்டையைச் சேர்ந்த விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. நவரட்ணம் சிவசீலன் வடமாகாணத்திற்கான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவராவார். ( )

## கோட்டை முனீஸ்வரன் நித்திய பூசை

(கொழும்புத்துறை)

யாழ். கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் தேவஸ்தானத்தில் கடந்த 17-ம் திகதி வியாழக்கிழமை முதல் நித்திய பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [154]

## 10,000 பணயக் கைதிகள்

(பாக்தாத்)

ஈராக் பகுதிகளில் சுமார் பத்தாயிரம் குவைத் மக்கள் பணயக் கைதிகளாக வைக்கப் பட்டுள்ளதாகக் குவைத் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்டில் இவர்கள் குவைத்திலிருந்து, ஈராக்கிற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

## உலக வளங்களும் யுத்த களங்களும்

உலக அரசியல் அரங்கில், ஏதாவது ஒரு 'அழுங்குப்பிடி' பிரச்சனை இல்லாது விட்டால் அமெரிக்க, ஐரோப்பிய வல்லரசு நாடுகளுக்கும், அதன் அடியாட்களுக்கும் நிம்மதியான உறக்கமே இருக்காது.

கொரிய யுத்தம், வியட்னாம் போர், அரபு-இஸ்ரேல் யுத்தங்கள், கியூபா நெருக்கடி போன்ற சர்வதேசச் சிக்கல்களின் தொடரில், மத்திய கிழக்கு பிரச்சனைகள் நீண்ட காலமாகவே உலக அரசியல் அரங்கின் தொடர் சங்கிலி நாடகமாகி இன்று ''குவைத்'' ஆக்கிரமிப்பு மூலம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

மத்திய கிழக்கில், ஐரோப்பிய வல்லரசுகளினால் உருவாக்கப்பட்ட பல்வேறு பிரச்சனைகளின் பின்னணியில் உலகினைக் கூறுபோட்டு, வேரூக்கி ஆதாயம்தேட உதவிய வரட்டு அரசியல் வாதங்களும், இன. மத, மொழி உணர்வலைகளும், பொருளாதார, சமூகச் சீரழிவுகளும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைக்கப்பட்டுச் சிக்கலின் சிதம்பலாக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஐரோப்பிய, அமெரிக்க முதலாளித்துவ வர்த்தகத்துக்கும் - மத்திய கிழக்கு எண்ணெய் வள முதலாளித்துவ வாதத்துக்கும் இடையே ஏற்பட்டு வந்த உராய்வில் பொறி கிளம்பி நெருப்பாகி, மூண்டு மூளாசி எரியும் நிலைக்கு இன்று வந்து விட்டது!

வளங்களை எப்படியும் சுரண்டி வாழ்வதையே மையமாக வைத்துஆண்டாண்டு காலமாக போர்க்களங்களை அந்நிய நாடுகளில் உருவாக்கி அழித்துப் பழக்கப்பட்ட ஐரோப்பிய அமெரிக்க வல்லரசுகளுக்கு எண்ணெய் வளத்தைக் கொண்ட வளைகுடா நாடுகளை யுத்த களமாக்குவது பெரும் காரியமல்ல!

ஆக்கிரமிப்பு! ஆக்கிரமிப்பு! என்று அதிகளவு அலட்டிக் கொள்ளும், ஐ.நா சபையும், ஐரோப்பிய நாடுகளும், கடந்த ஐந்நூறு ஆண்டு காலமாக ஆசிய, ஆபிரிக்கலத்தீன் - அமெரிக்க நாடுகளில் அரங்கேற்றியது. ஆக்கிரமிப்புபோர்களா? அல்லது அதைவிட கேவலமான அடிமைப்படுத்தும் போர்களா? என்பது அனைவருக்கும் நன்கு புரியும்!

'குவைத்' நாட்டை மீட்கப் போரிடுவதாக அறைகூவல் விடுக்கும் அமெரிக்கா அன்று கொரியாவிலும், வியட்னாமிலும், கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பிலிருந்து அந்த நாடுகளை மீட்கப் போரிடுவதாக கூறி நிகழ்ந்தது என்ன?

வயோதிபம் அடைந்துள்ள முதலாளித்துவமும், கம்யூனிஸமும் இன்று கைகோர்த்து நின்று, இளமையுடன் விளங்கும் எண்ணெய் வள முதலாளித்துவத்துக்கு பாடம் கற்பிக்க முனைகின்றன!

காலத்துக்குக் காலம் உலகில்தோற்றம்எடுத்து ஆட்டிப்படைத்த அரசியல் வாதங்கள் அனைத்துக்கும் பின்னணியில், 'வல்லவன் வாழ்வான்'' என்ற டார்வினின் இயற்கைத் தத்துவம்தான் அடிப்படை என்பதும்,— ''வளங்கள் உள்ள இடங்கள் நிட்சயம் யுத்த களங்கள் ஆகும்'' என்பதும், உறுதியாகி வருவது மட்டுமே, உண்மையிலும் உண்மை!

— மயூரன்

## இரண்டாயிரம் மண்ணெண்ணெ வியாபாரிகள்

[யாழ்ப்பாணம்]

சைக்கிள் வண்டிகளில் மண்ணெண்ணெ எடுத்துவருவதற்கான இரண்டாயிரம் வியாபாரிகள் வவுனியாவில் காத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் ஐந்து லீட்டர் மண்ணெண்ணெயே வவுனியாவில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

## இராசிபலன்

21-01-91

திங்கட்கிழமை

மேடம்: பணியாள் தொல்லை, அதிக யோசனை, குடும்பப் பிரிவு.

இடபம்: தொழில் லாபம், குடும்பச் சந்தோசம், பயணம்.

மிதுனம்: காரிய தாமதம், அதிகாரி சினம், பணவரவு.

கடகம்: நண்பர் தொல்லை, கருத்துமோதல், அலைச்சல் மிகுதி.

சிங்கம்: வாக்கு பலிதம், கடன் சுமை, உடல் சோர்வு.

கன்னி: மனநிறைவு, சுபகாரியச் செலவு தொழில் லாபம்.

துலாம்: தொழில் சிறப்பு, அதிகாரம், பொதுத்துறையில் ஈடுபாடு.

விருச்சிகம்: கடும் சினம், காரியத்தடை, கருத்துவேறுபாடு.

தனுசு: மனக்குறை, வாக்கினால் கலகம், குடும்பப்பிரிவு.

மகரம்: கடின உழைப்பு, குடும்ப சுகம், செல்வாக்கு.

கும்பம்: பிரயாணம், தொழில் பாதிப்பு, வாக்கு வன்மை.

மீனம்: விரோதியை வெல்லுதல், குடும்ப உல்லாசம், தொழில் லாபம்

'ஜோஸ்யர்'

# 14 ஈராக் வீரரை அமெரிக்க கடற்படை சிறைப்பிடித்தது!

## போர் மூன்று மாதம் வரை நீடிக்கும்

[பாக்தாத்]

குவைத் எல்லைப்பகுதியில் 40 ஈராக் படையினரை அமெரிக்க கடற்படைகள் சுட்டுக் கொன்றுள்ளதாகவும் 15 ஈராக்கிய வீரரை சிறைப்பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேல்மீது இரண்டாவது தடவையாக ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ள போதிலும், உடனடியாக எதிர்தாக்குதல் நடத்துவதில்லையென இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

## இஸ்ரேல் எச்சரிக்கை

ஈராக் ரசாயன ஆயுதங்களை பாவித்தால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது. தனது எல்லைகளையும் மக்களையும் பாதுகாப்பதில் இஸ்ரேலின் முக்கிய கவனம் இருக்கும் என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அமெரிக்கா உறுதிமொழி

நடமாடும் ஈராக்கிய ஏவுகணைகளை அழித்தொழிப்பதாக அமெரிக்கா உறுதியளித்ததைத் தொடர்ந்து பதில் தாக்குதல் நடத்துவதில்லையென இஸ்ரேல் முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஈராக் 142 விமானங்களை வீழ்த்தியது

இத்தப்போர் மூன்றுமாத காலத்திற்குமேல் நீடிக்கலாமென அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த மூன்று நாட்களில் நடந்த போரில் 142 அமெரிக்க நேசநாடுகளின் விமானங்களைச் சுட்டுவீழ்த்தியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது. ஆனால் பத்து ஜெட் விமானங்களை மட்டுமே ஈராக் சுட்டுவீழ்த்தியுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பதினொரு ஈராக் விமானம் வீழ்த்தப்பட்டது

அமெரிக்க நேசநாட்டுப்படைகள் இதுவரை 11 ஈராக்கிய விமானங்களை சுட்டுவீழ்த்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சவுதிஅரேபியா எல்லையிலுள்ள கச்சாய் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தையும், கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தையும் ஈராக் ஏவுகணைகளால் தாக்கி அழித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கிற்கு மருந்துவகைகள்

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் நேற்று வளைகுடா பகுதியில் ஈராக்கிற்கு மருந்துவகைகளை பெருமளவில் அனுப்பிவைத்துள்ளனர்.

## பாரதப் பிரதமர் தொடர்பு

வளைகுடா போரை முடிவுக்கு கொண்டுவர உலகத்தலைவர்களுடன் தாம் தொடர்பு கொண்டிருப்பதாக பாரதப்பிரதமர் எஸ் சந்திரசேகர் நேற்று நாட்டுமக்களுக்கு வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்: போரினால் உலகநாடுகளுக்கு குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளுக்கு பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அமைதியை மீண்டும் ஏற்படுத்த சகல விதத்திலும் முயல்வதாகவும் அவர் கூறினர்.

## ஈராக்கிடம் 800 ஏவுகணைகள்

ஈராக்கிடம் 800 ஏவுகணைகள் இருப்பதாக கூறப்படுகிறது. 'ஸ்கட்' என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணையின் உயரம் 36 அடியாகும். விலை 5 கோடி ரூபாவாகும். இந்த ஏவுகணையின் முனைப்பகுதியில் ரசாயன நச்சு அல்லது குண்டுகளை வைத்து ஏவலாம். சுமார் 600 மைலுக்கு மேல் செல்லக்கூடியது. இதுவரை ஈராக், ரசாயன ஏவுகணைகளை பாவிக்கவில்லை. இந்த் ஏவுகணைகளை ராடர் சாதனம் மூலம் கண்டு பிடித்து இடைவழியிலேயே அழித்து விடமுடியும்.

## போர் நெடுங்காலம் நீடிக்கும்

ஈராக் விமானப்படையினர் எதிர்தாக்குதலை தொடர்ச்சியாக நிலைநிறுத்தி வருவதால் இத்தப் போர் நெடுங்காலம் நீடிக்கலாம் என பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஈராக் யுத்தவிமானங்கள் நடுவானில் அமெரிக்க நேசநாடுகளின் விமானங்களை எதிர்த்து பலமாக தாக்குதல் நடத்திவருவதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 4000 தடவைகள் தாக்குதல்

ஈராக், குவைத் மீது இதுவரை 4000 தடவை தாக்குதல் நடத்தியுள்ளதாக, அமெரிக்க நேச நாட்டுபடைகளின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு மருந்து வகைகளை உடனடியாக அனுப்பி வைக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

## ஜோர்டான் பகுதி வான் பாதுகாப்பு

தனது வான் பகுதியில் தீவிர பாதுகாப்பை ஜோர்டான் ஏற்படுத்தியுள்ளது. உலகின் பல நாடுகளில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடந்து வருகின்றது.

## ஜப்பானியர் ஆர்ப்பாட்டம்

வளைகுடாப் பிரச்சினை தீர்க்கப்பட்டு இப்பகுதியில் பூரண அமைதி நிலவ அமெரிக்கா பாடுபடவேண்டும் எனக் கோரி ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகம் முன் ஜப்பானியர் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர்.

பெரும் தொகையானோர் சுலோகங்களை கோஷித்தவாறு சென்று மகஜர் ஒன்றை கையளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[ர]சாயன நிலையை அழிக்க சென்ற

# 40 அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசாமல் திரும்பின

## ஈராக் தரைப்படை மீது கடும் தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ள ரசாயன நச்சுவாய்வு நிலையங்களை முற்றாக அழித்தொழிப்பதற்கென புறப்பட்ட 40 அமெரிக்க நேச நாடுகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தாமலே திரும்பியுள்ளன. வானிலை சீரற்றதாக அதிகளவு மேகக் கூட்டங்கள் இருந்ததால், தாக்குதல் நடத்த முடியவில்லையென விமானிகள் தெரிவித்தனர்.

திட்டமிட்ட தாக்குதலை வேறொரு தினம் நடத்துவார்கள் என்றும், விமானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் நேற்று அமெரிக்க பன்னாட்டுப் படை விமானங்கள், ஈராக்கின் தரைப்படை தளங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன. பன்னாட்டுப் படையினரின் தரைப்படையினருக்கு பாதுகாப்பு வழங்குமுகமாகவே இந்த தாக்குதல் மேற்கொள்ளபட்டன,

### இஸ்ரேலில் ஏவுகணை பொருத்தப்பட்டது

இஸ்ரேலில் சக்திவாய்ந்த 'பேட்ரிட்' ஏவுகணைகளை அமெரிக்கா பொருத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடிகொடுப்போம் என்று இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து. இந்த ஏவுகணைகள் இஸ்ரேலில் பொருத்தப்பட்டுள்ளதாக அவதானிகள் கருதுகின்றார்கள். இஸ்ரேலுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இந்த ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### ஏவுகணைகளை அழித்துவிட...

இஸ்ரேல் மீது ஈராக் செலுத்தும் ஏவுகணைகளை வானத்திலேயே அழித்துவிடுவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா செய்துவருவதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலில் மக்கள் தொடர்ந்து இரண்டாவது நாளாக முகமூடி அணிந்துள்ளனர்: சாப்பாட்டு நேரம்மட்டுமே முகமூடியை அகற்றுகின்றனர்: 24 மணி நேரமும் காற்றுப்புகாத அறைகளில் தங்கியுள்ளனர். பாக்தாத் தாக்குதலைத் தொடர்ந்து அங்கு மின்சாரம், நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது:

### சவுதி மக்கள் வெளியேற்றம்

சவுதி அரேபியாவிலிருந்தும் ஜோர்தான் எல்லையூடாக மக்கள் வெளியேறிச்சென்றுர்கள் இவர்களில் இலங்கையர் எவரும் இல்லையென்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

### இலங்கையர் பற்றி தகவல் இல்லை

ஈராக்கிலிருந்து ஜோர்தானுக்கு இலங்கையர் எவரும் இடம்பெயர்ந்துள்ளார்களா? இல்லையா என்பதுபற்றி எதுவும் தெரியவில்லை என்றும் அவர் கூறினர்.

பக்தாத்திலிருந்து வெளிநாட்டு நிருபர்கள் வெளியேறி வருவதாக ஜோர்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு ஐவர் பலி, 50 பேர் காயம்

பாகிஸ்தானில் தியேட்டர் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஐவர் பலியானுர்கள்: ஐம்பது பேர் காயம் அடைந்தனர்.

அமெரிக்காவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈராக் ஆதரவாளர்களே இக்குண்டு வெடிப்பை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் குண்டு ஒன்றை எடுத்துச் சென்ற ஈராக் பிரஜை ஒருவர் அக்குண்டு தவறுதலாக வெடித்து மரணமானுர். லெபனுனிலும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

### 96 பேர் பலி 50 பேர் காயம்

இதுவரையும் நடைபெற்ற தாக்குதலில் தமது தரப்பில் 96 பேர் பலியானதுடன் 50 பேர் காயமடைந்துள்ளதாக ஈராக் தெரிவித்துள்ளது.

### இந்திய-சோவியத்யோசனை நிராகரிப்பு

யுத்த நிறுத்தம் பற்றிய புதிய அறிவுறுத்தல் ஒன்று நியூயோர்க்கில் ஐ. நா. பாதுகாப்புச் சபை மூலம் ஈராக் தூதரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்திய, சோவியத் யூனியனின் யோசனைகளும் ஈராக் தூதரிடம் கையளிக்கப்பட்டதாயினும் இந்த ஆலோசனைகளை ஈராக் தூதர் நிராகரித்து விட்டார்.

## போக்குவரத்து பாதிப்பு

(பூநகரி)

கடும் மழை காரணமாக பூநகரி-மன்னுர் வீதியில் பாலியாறு பெருக்கெடுத்துப் பாய்வதால் போக்குவரத்துப் பாதிப்படைந்துள்ளது.

# சொகுசு பஸ் பயணிகள் இடைவழியில் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ். நகருக்கு வரும் பயணிகளை, கேரதீவு வரை நேரடியாகக் கொண்டு செல்கிறேம் எனக் கூறி, பயணிகளை வவுனியாவில் இறக்கிவிடும் நடவடிக்கையை யாழ். நகரில் உள்ள சொகுசு பஸ் நிறுவனம் ஒன்று மேற்கொண்டுவருவதாக பிரயாணிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான விசேட அனுமதியை இராணுவத்திடம் பெற்றுள்ளதாகக் கூறி, பயணிகளை இரவு 10-00 மணிக்குப் பின்னர், கொழும்பு ஐந்து லாம்படிச் சந்தியில் வைத்து ஒரு பயணியிடம் தலா 600 ரூபாவும், அவர்கள் கொண்டு வரும் பொதிகளுக்கு ஆகக் குறைந்தது 400 ரூபா வீதமும் அறவிட்ட பின்பு, சொகுசு பஸ்களில் ஏற்றி வந்து திடீரென "இராணுவத்தினர் மேற்கொண்டு பயணத்தைத் தொடர அனுமதி மறுக்கின்றுர்கள். ஆகவே எல்லோரும் இறங்குங்கள்" எனக் கூறிப் பயணிகளை இடை நடுவில் கைவிட்டுவிட்டு, பின்பு யாழ். நகரிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகளை [வவுனியாவிலிருந்து மேற்படி கட்டணங்களுடன் ஏற்றிச்செல்கின்றனராம். (வி)

## யாழ். மாவட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

27 ரூபா, சீனி ஒரு கிலோ 38 ரூபா, மண்ணெண்ணை ஒரு லீற்றர் 30 ரூபா, தேங்காயெண்ணை ஒரு லீற்றர் 40 ரூபா, சன்லைட் சவர்க்காரம் 8 ரூபா சர்க்கரை 38 ரூபா. [வி]

## பொருள்களின் விலை பின்வருமாறு அமைகின்றது:

| பொருட்கள் | கொழும்பு விலை | ஏற்றுக் கூலி | முடிவு விலை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|---|---|---|
| மாவு | 13-00 | 10-00 | 23-00 | 25-00 | 27-00 |
| சீனி | 24-00 | 10-00 | 34-00 | 36-00 | 38-00 |
| ம. எண்ணை | 12-50 | 10-00 | 22-50 | 25-00 | 30-00 |
| தே. எண்ணை | 24-00 | 10-00 | 34-00 | 36-50 | 40-00 |
| சன்லைட் | 04-75 | 01-50 | 06-25 | 07-25 | 08-00 |
| சர்க்கரை | 24-00 | 10-00 | 34-00 | 36-00 | 38-00 |

மேற்குறிப்பிட்ட விலைகளைவிட அதிக விலையில் விற்கக்கூடாதென யாழ் மாவட்ட வர்த்தகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அறிக்கையின் முழு விபரம் நாளை வெளிவரும்) (வி)

## குருமன் காட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் கைப்பற்றப்பட்டன:

இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியே வந்த போது விடுதலைப் புலிகளி இடைமறித்து எதிர்த் தாக்குதல்களை நடத்தி, இராணுவத்தினரின் காவல் அரணையும் கைப்பற்றினர்கள்.

இம்மோதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி-56-2 ரகத் துப்பாக்கி, இதற்குரிய ரவைக் கூடுகள் 3 ஏ.கே., எல்.எம்.ஜி. ரவைக் கூடுகள் 2, எல்.எம்.ஜி. ரவை கோர்வைகள் 200, ஐ எம்.ரவைக் கூடுகள் 500.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2 போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

வவுனியா விளாத்திக்குளம் லவன் (தர்மலிங்கம் யோகராசா), ஓமந்தை நிச்சன் (சுணேஸ் ஜெயதாசன் ஆகிய இருவருமே வீரமரணம் அடைந்தவர்களாவர். (வி-மா)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## தொண்டமனாறு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதேசமயம் ஹெலிகொப்டர்கள் இரண்டு, பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான். தெல்லிப்பளைப் பகுதிகளில் கலிபர், கிரனேட், மோட்டர் தாக்குதலை நடத்தின.

பலாலி இராணுவ முகாமிலிருந்தும் நேற்றுத் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. (86-51)

## உலர் உணவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

படுவதாக அறியப்படுகிறது.

அண்மையில் மோசடியான முறையில் கணிசமான அட்டைகளை சில தனிப்பட்டவர்கள் தவறுன வழிகளில்பெற்று பெரும் பணம் சம்பாதிப்பதற்கு முயற்சித்தபோது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளது.

இந்த நிலைமையைப்பயன்படுத்தி தாம்விட்ட தவறுகளை மக்கள் மத்தியிலிருந்து மறைப்பதற்காக உண்மையற்ற வதந்திகளை பரப்பி வருகிறுர்கள்,

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் உலர் உணவு அட்டைகளை பரிசீலிப்பதற்கோ அல்லது வேறு வகையில் மக்களை சிரமங்களுக்கு உள்ளாக்கும் எந்த செயற்பாட்டையும் செய்யவில்லை என்பதை மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறுர்கள். (வி)

## வல்வெட்டித்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலினுல் எட்டு பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் பத்து பேர் படுகாயமடைந்தனர் வீடுகள் பல சேததடைந்தன.

இத்தாக்குதலை யடுத்து வடமராட்சிப் பகுதியிலிருந்து மக்கள் இச்செய்தி அச்சுக்குப் போகுவரை இடம் பெயர்ந்த வண்ணமிருந்தனர். (51)

## 150 லொறிகளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

ணுவ முகாமில் அனுமதிக்காக காத்து நிற்கின்றன.

தினசரி 20 லொறிகள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. நேற்று முன்தினம் பூநகரி ஊடாக 30 லொறிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

## வவுனியாவில்

(1ம் பக்க தொடர்ச்சி]

சாலை முற்றாக சேதமடைந்ததுடன் மருந்து வகைகளும், வைத்திய உபகரணங்களும் சேதமடைந்து விட்டதாகக் கூறப் படுகிறது:

மன்னுர் மாவட்டத்திலுள்ள விடத்தல் தீவில் நேற்றுமுன் தினம் விமானக்குண்டு வீச்சு இடம் பெற்றது.

இத்தாக்குதலினுல் 3 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இதேவேளையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன் தினம் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது. [வி-மா]